கலைத் துறைகளிலே திறமைபெற்று விளங்குகிறவர்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள், சான்றிதழ்கள், பாராட்டுக்கள், பட்டங்கள் வழங்குகின்ற முயற்சி கடந்த 10, 15 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து வருகிறது.

குளித்தலையை நகராட்சியாக்கல்

*464 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பற்றி அரசு ஒரு முடிவு எடுத்தப் பின்னர் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை, நகராட்சிகளாக மாற்ற வேண்டுமானால் முன்பு ரூ. 10,000 வருமானம் இருக்கவேண்டுமென்று இருந்தது. இப்பொழுது அதை ரூ. 30,000ஆக உயர்த்தியிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அது உண்மையா? அப்படியென்றால், ரூ. 30,000 வருமானம் இல்லாத நகராட்சிகளை மீண்டும் பேரூராட்சிகளாக மாற்றுகின்ற செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பேரூராட்சிகள், நகராட்சிகளாக வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 20,000 மக்கள் தொகை இருக்கவேண்டும். வருவாய் ரூ. 1 லட்சமாவது இருக்கவேண்டும். அந்த வகையிலே பேரூராட்சிகள் நகராட்சிகளாக்கப்படும். சிற்றூராட்சியைப் பேரூராட்சியாக்குவதற்கு 5,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருக்கவேண்டும். ரூ. 20,000-க்கு மேற்பட்ட வருவாய் இருக்க வேண்டும். இது 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டதன் காரணமாக, இப்பொழுது மக்கள் தொகை வளர்ந்திருக்கிற அளவுக்கும் வருவாய் இனங்கள் வளர்ந்திருக்கின்ற அளவுக்கும் அந்தத் தொகையை உயர்த்தலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, குழித்துறை பேரூராட்சிக்கு அமைச்சர் சொன்ன எல்லா முறைகளும் அமைந்திருக்கின்றன. ஆகவே, கூடிய விரைவிலே அதை நகராட்சியாக அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், அது பரிசீலனையில் இருக்கிறது. குழித்துறைப் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்றால் கணிச

மான அளவுக்கு பல காரணங்களுக்காக அதனைச் சார்ந்த பகுதிகள் சில வற்றைச் சேர்த்தால்தான் நகராட்சியாக மாற்ற முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. இதைத் துறையினர் ஆராய்ந்து வருகிருர்கள். ஆராய்ந்த பிறகு, அவைகளைச் சேர்த்தப் பிறகு, ஒப்புதல் தரப்படும். இதையெல்லாம் ஆராய்ந்த பிறகுதான் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படும்.

திரு சொ. காவேரிமணியம் : இவ்வாறு பேரூராட்சிகளை நகராட்சி மன்றங்களாக ஆக்குவதற்கான வழிமுறைகள் பல பேரூராட்சிகளுக்குப் பொருந்தியிருக்கின்றன. உள்ளபடியாக ஏரியாவைப் பொறுத்தவரையிலேயும், வரக்கூடிய வருமானத்தைப் பொறுத்தவரையிலேயும், வாழ்கின்ற மக்கள் தொகையைப் பொறுத்தவரையிலேயும் எல்லாவிதமான விதிமுறைகள் பொருந்தியிருந்தும் பல பேரூராட்சிகள் நகராட்சிகளாக ஆகாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம் ஆண்டுதோறும் இவ்வளவுதான் நகராட்சிகளாக வரவேண்டுமென்று அரசு ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மக்கள் தொகையும் குறிப்பிட்ட அளவு இருக்கவேண்டும். வருமானமும் குறிபிட்ட அளவு இருக்கவேண்டும். சில பல இடங்களிலே பேரூராட்சிகளை உடனடியாக நகராட்சிகளாக ஆக்கவேண்டாமென்று ஏகோபித்து கருத்து தெரிவித்திருர்கள். பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்க வேண்டாமென்று ஏகோபித்து தெரிவிக்கிற அவர்களுடைய விருப்பம் கனிகிற அளவுக்கு அந்தத் திட்டங்கள் சில காலம் விடப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே பேரூராட்சிகளை நகராட்சிகளாக்க முயற்சிகள் செய்கிருர்கள். சில இடங்களிலே சில பகுதிகளைச் சேர்த்தால்தான் முடியும். அதைச் சேர்க்கும்போது சில பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அந்த வகையிலே தான், எல்லோருடைய ஒப்புதல் அடிப்படையிலே முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்குவதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய மானியம் வழங்குகின்ற காரணத்தால், அதனுடைய சம்மதம் பெறப்பட்டிருக்கிறதா? அந்த அடிப்படையிலே முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. மாநில அரசு அளவிலேயே இதுபற்றித் திட்டவட்டமான முடிவு எடுக்கலாம்.

பஞ்சாயத்துப் பகுதிகளிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*465 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி- உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்துப் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமித்துள்ளவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரித் தொகையை அந்தந்த ஊராட்சிகளுக்கே ஒப்படைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?